# தமிழ் அறிவுப் போட்டி 2023

# புகுநிலை வகுப்பு

# மாதிரி வினாக்கள்

# 1. பின்வரும் சொல்லைப் பிரித்துக் கூறுக?

# மூவாயிரம்

# விடை:

## மூன்று + ஆயிரம்

2. புலம் பெயர் தமிழர்கள் தமது கலாசாரத்தையும் பண்பாட்டையும் கட்டிக் காத்து வரும் இரண்டு முறைகளைக் கூறுக?

▪

விடை:
- கலை கலாசார நிகழ்வுகள்
- ஆலயங்கள்
தமிழ்ப் பாடசாலைகள்
தமிழ்க் கலைகளைக் குழந்தைகளுக்குக் கற்பித்தல்
- தமிழ் வானொலி நிலையங்கள்

# 3. நீரிலும் நிலத்திலும் வாழும் இரண்டு உயிரினங்களைக் கூறுக?

# விடை:

# தவளை

# ஆமை

# (முதலை)

# 4. சூரியன் என்பதற்கு மூன்று ஒத்த கருத்துள்ள சொற்களைக் கூறுக?

# விடை:

பரிதி, பகலவன், வெய்யோன்,

இரவி, ஆதவன், கதிரோன்

கதிரவன், ஞாயிறு, ……

5. ‘விளையாடுகிறான்’ என்பது

நிகழ்காலம். இதனை எதிர்காலத்தில்

எப்படிக் கூறலாம்?

# விடை:

# விளையாடுவான்

# 6. ‘வேல் + படை’ சேர்த்துக் கூறுக?

# விடை:

# வேற்படை

# 7. இந்தியாவின் தேசபிதா என

# அழைக்கப்படுபவர் யார்?

# விடை:

## மகாத்மா காந்தி

## (காந்தி)

# 8. ‘மதித்தல்’ என்ற சொல்லின் எதிர்க் கருத்துச் சொல் எது?

# விடை:

## அவமதித்தல்

# 9. பஞ்சபூதங்கள் யாவை?

# விடை:

நிலம்,
நீர்,
நெருப்பு (தீ),
காற்று,
ஆகாயம்

# 10. நாலா பக்கமும் கடலால் சூழப்பட்ட

# சிறிய நிலப்பரப்பு

# எப்படி அழைக்கப்படுகின்றது?

# விடை:

## தீவு

# 11. பின்வரும் பழமொழியை முடித்துவைக்கவும்.

முயற்சி உடையார் ………….
……………..

# விடை:

## இகழ்ச்சி அடையார்

# 12. நிகழ்ச்சி ஒன்றை முதன்முதலில் மேடையேற்றுவதை எப்படி அழைப்பார்கள்?

# விடை:

## அரங்கேற்றம்

# 13. முத்தமிழ்கள் எவை?

# விடை:

**இயல்**

**இசை**

**நாடகம்**

# 14. உங்கள் அப்பாவின் தங்கையின்

# கணவன் உங்களுக்கு என்ன உறவு?

# விடை:

## மாமா

# 15. முக்கனிகள் எவை?

# விடை:

மாம்பழம்
வாழைப்பழம்
பலாப்பழம்
(மா, பலா, வாழை)